SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.
T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

# மாதாந்த அறிக்கை தை, 2014

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

18/3A Anai Road
Kaneshapuram
0772242401



SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டுவிபரம்

எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் .(Create a conducive Society for Good Environment for the Future).

மேற்படி திட்டத்தினை மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு, ஆரையம்பதி பட்டிப்பளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்படி திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

## காலநிலைமாற்றமும் சூழல் பாதுகாப்பும் (Climate Change & Environment protection)

மட்டக்களப்பு நகரில் 82 மரங்களுக்கும் களைகள் அகற்றப்பட்டு அவை பராமரிக்கப்பட்டுவருகின்றன. குறிப்பாக மரநடுகை வேலைக்கென புதிய ஊழியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர் ஊறணி தொடக்கம் ஆரையம்பதி வரையுமான 180 மரங்களையும் பராமரித்து வளர்பதற்கான பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆரையம்பதி பிரதேசத்தில் 21 திருக்கொன்றை மரங்கள் நடுகை செய்யவேண்டியுள்ளதனால் அவை இம்மாதம் இறுதியிலிருந்து நடப்பட்டு வருகின்றதுடன் களைகளும் அகற்றப்பட்டு வருகின்றன. குறிப்பாக 2011 ம் ஆண்டு ஊறணியில் நடப்பட்ட மரங்கள் தொடர்பாக களப்பார்வை மேற்கொண்டுள்ளதுடன் மிகவும் அழகிய முறையில் வளர்ந்து காட்சிதருகின்றன.

## அனர்த்த முகாத்துவ வேலைத்திட்டம்

எமது நிறுவனம் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் கிராமமட்டத்தில் அனர்த்தம் தொடர்பிலான விழிப்புணர்வினை வழங்கி கிராமந்தோறும் அனர்த்த முகாமைத்து குழுக்களை உருவாக்கி அனர்த்தத்தினை எதிர்கொள்வதற்கான முன்னாயத்த நிலையினை உருவாக்குகின்ற செயற்பாடுகளை தெரிவுசெய்யப்பட்ட கீழ்வரும் கிராமசேவகர் பிரிவுகளில் செய்து வருகின்றது. அந்தவகையில் இம்மாதம் அக்கிராமங்களுக்கான இடர் வரைபடங்கள் வரையப்பட்டு கிராமசேவகர்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதுடன் கிராமத்திற்கான அனர்த்த முன்னாயத்த திட்டமிடல் புத்தகம் தயாரிப்பதற்கான தகவல்கள் திரட்டப்பட்டுள்ளது.

# SOND அம்பாறை மாவட்டத்தின் செயற்பாட்டுவிபரம்

எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் .(Create a conducive Society for Good Environment for the Future).

## மக்கள் உற்பத்தி நிலையத் திறப்புவிழா

அம்பாறை மாவட்டத்தில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்கமளிக்கும் நோக்கில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்று 2014.01.17 ம் திகதி சாகாம வீதி அக்கரைப்பற்றில் SOND அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் அவர்களினால் வைபவ ரீதியாக பிற்பகல் 12.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. SOND அமைப்பின் இலக்குக் குழுக்கள், ஆளுனர் சபை உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

## நுண்கடன் திட்டம்

நுண் கடன் திட்டத்தினை ஆய்வு நோக்கில் மேற்கொண்டு பெறப்படும் கற்றல்களின் மூலம் நுண்கடன் திட்டத்தினை முறைப்படுத்தல் எனும் நோக்கில் PPDS,SEDO ஆகிய அமைப்புக்களின் 08 பயனாளிகளுக்கு சுயதொழில் மேற்கொள்வதற்கான நிதி உதவிகள் வழங்கப்பட்டது.

## முன்மாதிரிப் பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் SOND அமைப்பினால் விவசாயப் பண்ணையானது செயற்படுத்தப்பட்டுவருகின்றது. சுற்றுவேலி அமைத்தல், நிலம் பண்படுத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.









SOND

## பாலர் பாடசாலை ஆசிரியருக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்.

பாலர் பாடசாலையின் முன்னேற்றத்தினை அறியும் பொருட்டு 2014.01.13ம் திகதி அன்று மாலை 03.00 மணிக்கு SOND அமைப்பின் பணியாளரான தி.ஜெனிதா அவர்களின் தலைமையில் SOND பயிற்சி மண்டபத்தில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் 13 முன்பள்ளியைச் சேர்ந்த 23 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

Shiva charity அமைப்பின் ஆனுசரனையுடன் நடைபெறும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்காக பயிற்சிக்காக கொழும்பிற்குச் செல்லும் ஒழுங்குகள் பற்றிப் பேசப்பட்டது.





## நிதியின்றிய செயற்திட்டம்

அரச சார்பற்ற நிறுவன மென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

### சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு கடந்த 2011.மார்ச் மாதம் தொடக்கம் தற்போது வரை சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 11 ஆண், 19 பெண் உள்ளடங்கலாக 30 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்

### *சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.*

1. சிறுவர்கழகத்தின் சிறுவர்களினால் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் நடமாடும் நூலகசேவை நடை பெற்றது இதில் 115 புத்தகங்கள் வழங்கப்பட்டது.
2. எமது அலுவலகத்தில் காணப்படும் இரு பக்கங்கள் பாவித்த தாள்களைக் கொண்டு காந்தி சிறுவர்கழக உறுப்பினர்களினால் 425 பக்கற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

### *SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.*

1. காந்தி கழக சிறுவர்களுக்கு நான்கு கணனி வகுப்புக்கள் **SOND** பணியாளரான ஜெனிதா அவர்களினால் நடாத்தப்பட்டது.
2. சிறுவர்களின் ஓய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கரம் போட், **foot Ball , Cricket Bat** வழங்கப்பட்டுள்ளது.







SOND

## ஜீவ உயிர் விவசாயப் பயிற்சி.

2014.01.18,19 ம் திகதி ஜீவ உயிர் விவசாயப் பயிற்சி பேராசிரியர். றிச்சாட் அவர்களால் நடாத்தப்பட்டது. 2ம் நாள் சுவாட் அமைப்பினால் நடைமுறைப்படுத்திவரும் தாமரைக்குளத்திலுள்ள **Model farm** ல் இயற்கை பசளை தயாரித்தல் செய்முறைப் பயிற்சியும் இடம் பெற்றுள்ளது.



## இளையோர் கலந்துரையாடல்

இளையோர்களால் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான செயற்திட்டக் கலந்துரையாடலானது 2014.01.07 ம் திகதி சொண்ட் அலுவலகத்தில் நிறைவேற்றுப்பணிப்பாளர் தலைமையில் நடை பெற்றுள்ளது. இதில் 11 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.



SOND

## ஆளுனர் சபைக் கலந்துரையாடல்.

**SOND அமைப்பின் ஆளுனர் சபைக் கூட்டமானது 26/01/2014 அன்று சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு அக்கரைப்பற்று SOND அமைப்பில் அதன் தலைவர் திரு.ச.செந்துராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.**

## பணியாளர் கலந்துரையடல்

2014.01.27ம் திகதி அன்று தற்போது அக்கரைப்பற்று அலுவலகத்தில் நடைபெறும் செயற்பாடுகள் இதன் முன்னேற்றம் எதிர்காலத் திட்டமிடல் தொடர்பான கலந்துரையாடல் நிறைவேற்றுப்பணிப்பாளரால் நடாத்தப்பட்டது.

## வளநிலைய பயன்பாடு

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 12 தலைப்பில் 135 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.



# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## முதலுதவி பயிற்சி

முதலுதவி பயிற்சி நெறியானது 06.01.2014,07.01.2014 ஆகிய இருதினங்களில் SOND அலுவலகத்தில் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் முதலுதவி பயிற்சி நெறிக்கு பொறுப்பான திரு.இலங்கேஸ்வரன் .அவர்களால் நடாத்தப்பட்டது. இதில் 16 பேர் கலந்துகொண்டிருந்தனர். பங்குபற்றுனர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.







## ஜீவஉயிர் விவசாயப் பயிற்சி

11.01.2014,12.01.2014 ஆகிய இரு நாட்களும் எமது SOND அலுவலகத்தில் ஜீவஉயிர் விவசாயப் பயிற்சியானது பேராசிரியர். றிச்சாட் அவர்களால் நடாத்தப்பட்டது. அத்துடன் பேராசிரியர். .றிச்சாட் அவர்களால் 2 ஆம் நாள் களப்பயிற்சி நீர்வேலியிலுள்ள Model Farm இல் நடாத்தப்பட்டது.





**SOND**

### வர்த்தக கண்காட்சி

17.01.2014 தொடக்கம் 19.01.2014 வரை யாழ்ப்பாணத்தில் வர்த்தக கண்காட்சி நடைபெற்றது. இதில் உள்ளூர் உற்பத்தி நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்று இயற்கை முறையிலான பயிர்ச்செய்கை முறைகள், யாழ்ப்பாணத்தில் செய்கை செய்யப்படும் மரக்கறிகள் மற்றும் ஏனைய பொருட்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டது. இக் காண்காட்சியினை பெருமளவான மக்கள் பார்வையிட்டுச் சென்றனர்.






### மதிப்பீட்டுக் கலந்துரையாடல்

25.01.2014 சனிக்கிழமை டயக்கோனியா திட்ட **Evaluation Team** நீர்வேலியில் அமைக்கப்பட்டுள்ள **Model Farm** இன் விவசாய பயனாளிகளை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடலை மேற்க்கொண்டிருந்தனர்.








SOND

## இடைவிலகிய சிறுமியைப் பாடசாலையில் இணைத்தல்

சுழிபுரம் கிழக்கு கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட காட்டுப்புலம் கிராமத்தில் உள்ள முன்பள்ளியில் மாணவர்களுக்கு எமது MRE பணியாளர்கள் மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வு வழங்கிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இச் சிறுமி இனங்காணப்பட்டார். பின்னர் எமது MRE திட்ட பணியாளர்கள் அவர்களுடைய வீட்டிற்கு சென்றிருந்தனர். இவருடைய தாயார் இறந்துவிட்டார். இவரது கல்வி செயற்பாடுகள் தொடர்பாக தந்தை, சகோதரர்கள், மற்றும் சிறிய தாயார், சிறிய தந்தையுடன் கலந்துரையாடி, பின்னர் கைதடி நவீல்ட் பாடசாலை அதிபருடைய அனுமதியினைப் பெற்று எமது பணியாளர்களால் 28.01.2014 அன்று அவருக்குத் தேவையான பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ளார்.






## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.

